1983 ஜனவரி 27]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து தலைவர் அவர்களே, எம். சி. 7 பருத்தி இரகத்தை சிபாரிசு செய்திருக்கிறது. தனியே மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை.

தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகை.

* வினா எண் 10—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–1981-ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(ஆ) 1981-1982-ம் ஆண்டில் வந்த ஒன்றியங்கள் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது?

(இ) ஒதுக்கப்பட்ட குறியீட்டுப் பணம் அண்மையில் குறைக்கப்பட்டுள்ளதா?

(ஈ) இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 69 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் சராசரியாக சுமார் ரூபாய் 35 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டில் 150 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சுமாராக 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

(இ) இல்லை.

(ஈ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டுகளில் முதலில் சராசரியாக 40 இலட்சம் ரூபாய் என்ற அளவில் ஒதுக்கப்பட்டது. அதற்கு பிறகு இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் என்று சில பஞ்சாயத்து யூனியன்களில் வெட்டப்பட்டுவிட்டதன் காரணமாக பல வேலைகள் அப்படியே கிடந்து விட்டன. என்பதாக அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா? அப்படியானால் அதில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக கடையம் ஊராட்சி ஒன்றியத்தில், இதன் காரணமாக 4, 5 பல வேலைகள் நிறைவேற்றப்படாமல், நிறுத்தப்பட்டிருப்பதை அரசு அறியுமா அவை நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டில் மீண்டும் கூடுதல் பணிகள் செய்வதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் அங்கேயிருக்கிற ஆட்சியாளர்களுடைய வேண்டுகோளிற்கிணங்க பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விடுபட்டு போயிருந்தாலும் அவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, 1980-81, 1981-82 ஆம் ஆண்டுகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் பல ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட பல வேலைகளுக்கு இன்னும் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கின்றது. செய்த வேலைகளுக்காவது பணம் பட்டுவாடா செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்த வேலைகளுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இதுவரையில் அரசினுடைய கவனத்திற்கு வரவில்லை. எந்தெந்த ஒன்றியங்களில் பணம் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது என்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியவாறு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டிருப்பது உண்மை. இருந்தாலும் இதன்கீழ் எத்தனை வேலைகள் நடந்திருந்தாலும்கூட சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் போடப்பட்ட ரோடுகள், கட்டப்பட்ட கட்டிடங்கள் பல இடங்களில் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே பராமரிப்பு வேலைகளை செய்வதற்காக பணம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, செய்யப்பட்ட வேலைகளில் பராமரிப்பு என்பது அந்தந்த ஒன்றியங்களே செய்ய வேண்டும். பொதுநிதியிலிருந்து இந்த பராமரிப்பு பணிகளைச் செய்யலாம். பொது நிதியில் பணம் இல்லையென்றால் அரசாங்கத்திடமிருந்து 'வேஸ் அண்ட் மீன்ஸ்' -ல் பணம் அட்வான்ஸாகப் பெற்றுக்கொண்டு அந்த பராமரிப்புகளை செய்ய வேண்டும்.

திரு. மீ. வின்செண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட வேலைகளில் ஊராட்சி ஒன்றியங்களில் சில கிராமங்கள் விட்டுபோய் இருக்கின்றன. விடுபட்ட கிராமங்களிலும் இந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 சனவரி 27]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூன்று கட்டமாக இந்த பணிகள் நடைபெற்று இருக்கின்றன, 1980-81, 1981-82 மற்றும் 1982-83. ஆகவே முதல் கட்டத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்களிலும், இரண்டாவது கட்டமாக 150 ஊராட்சி ஒன்றியங்களிலும், மேலும் 159 ஊராட்சி ஒன்றியங்களில் இந்த ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே எந்தெந்தக் கிராமங்களில், எந்தெந்த பணிகள் விடுபட்டுப் போயிருக்கின்றனவோ அவைகள் எல்லாம் கண்டிப்பாக எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகளில் முக்கியமான பணி குடிநீர் வழங்கும் திட்டம். இந்தக் குடிநீர் வழங்கும் திட்டம் இன்னும் பல்வேறு ஒன்றியங்களில் இருக்கிற கிராமங்களில் சரிவர நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மையா? அப்படி நிறைவேற்றப்படாமல் இருந்தால் அரசு அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில கிராமங்கள் என்றாலும் ஒன்றுதான். பல கிராமங்கள் என்றாலும் ஒன்றேதான். திரு. வின்சென்ட் அவர்களும் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள்.

(முற்பகல் 9.50)

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் நடந்த பள்ளிக்கூடங்கள், பாலங்கள், மற்றவைகளுக்குத் திட்ட மதிப்பீட்டில் சிமென்டுக்கு ரூ. 36 என்று போட்டு, அந்த ஒப்பந்தக்காரர்களிடம் ரூ. 42 பிடித்து, பலமுறை கோரிக்கைகள் வைத்தும், எல்லோரிடமும் கூறியும் இன்னமும் அவர்களுக்குப் போதிய பணம் கொடுக்கவில்லை. அரசும் அதற்குத் தனியான தாக்கீது அனுப்பியுள்ளது. ஆனால், சேலம் மாவட்டத்தில் பல பகுதிகளில் இது போன்ற ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படி ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அதிகமாகப் பணம் பிடித்தம் செய்து அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தால், அவைகளைத் தயவுசெய்து தனியாக என்னிடத்திலே நீங்கள் கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.